**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)**
**மாதிரிப்பரீட்சை V 2018**

| 33 | T | I |
|---|---|---|

வரலாறு I

ஒரு மணித்தியாலம்

**கவனிக்குக.**

(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாத்தாளுக்கு **80** புள்ளிகள் வழங்கப்படும்.

(ii) 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைத்தாளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க.

(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை உரிய வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.**

(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து பின்பற்றுக.

01. இலங்கையின் வரலாற்றினைத் தொடர்ச்சியாகத் தருகின்ற உள்நாட்டு இலக்கிய மூலாதாரமான மகாவம்சம் என்னும் நூலை எழுதியவரையும் அவர் வசித்த பிரிவேனாவையும் தருகின்ற விடையை முறையே தெரிவு செய்க.
1. மகாநாம தேரர் - பெப்பிலியானே சுனேத்திராதேவி பிரிவெனா
2. தொட்டகமுவ நீராகுலதேரர் - வீதாகம கணானந்த பிரிவெனா
3. காரகல வனரத்னதேரர் - காரகல பத்மாவதி பிரிவேனா
4. மகாநாம தேரர் - திக்சந்த செனவியா பிரிவெனா

02. இராசரட்டைக்கால பௌத்த சமய வரலாற்றை அறிய உதவும் நூல்கள் இரண்டு
1. தாதுவம்சம் - பூயாவலிய
2. தூபவம்சம் - கவிசிலுமின
3. போதிவம்சம் - எழுசதஸ்லகுண
4. சந்தர்மாலங்கார – புதுகுணாலங்காரய

03. கி. பி. 90 – 168 காலப்பகுதியில் உரோமப் பேரரசின் ஆட்சிக்கு உட்பட்ட எகிப்திய நகரான அலெக்சான்றியாவில் வாழ்ந்த கிரேக்க இனத்தவரான குளோடியஸ் தொலமியால் வரையப்பட்ட உலகப் படத்தில் இலங்கைக்கு வழங்கப்பட்ட பெயர்.
1. செரண்டிப்
2. இரத்தினதுபீபம்
3. தப்ரபேன்
4. சிலோன்

04. இலங்கையில் கிடைக்கப் பெற்ற மிகப் புராதன நாணயம்
1. தம்பமஸ்ஸ
2. கஹபண
3. சுவஸ்திகா நாணயம்
4. அக

05. இசுறுமுனி விகாரையை அமைத்த மன்னன்
1. துட்டகைமுனு
2. வலகம்பா
3. தேவநம்பியதீசன்
4. தாதுசேனன்

06. இலங்கையின் அதிவரண்ட வலய நிலத்தின் களிமண்ணுடன் கூடிய மணல் மண்ணினால் மூடப்பட்டுள்ள சரளைக் கற்படிவுகள் காணப்பட்ட இடம்.
1. இரணைமடு
2. புளியங்குளம்
3. அன்டிகம
4. ஆனைமடு

07. இலங்கையின் மத்திய காலத்திற்குரிய கேத்திர கணித உருவிலான கல்லாயுதங்கள் உருவாக்கப் பயன்படுத்தப்பட்டது.

1. கற்கள்
2. கண்ணாடி
3. களிமண்
4. பளிங்கடுக்குப்பாறை

08. முன்வரலாற்றுக் காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்.

1. உணவு தீயில் சுட்டு சாப்பிடப்பட்டமை, உப்புப் பயன்படுத்தப்பட்டிருந்தமை
2. நிலையான குடியேற்றம் அமைக்கபட்டமை, விவசாயம் செய்யத்தொடங்கியமை
3. விவசாயம் செய்யத்தொடங்கியமை குளங்கள் அமைக்கப்பட்டமை.
4. உப்புப் பயன்படுத்தப்பட்டமை, நிலையான குடியேற்றம் அமைக்கப்பட்டமை

09. முன் வரலாற்றுக்காலத்திற்குரிய களிமண் ஓட மயானம் கண்டறிப்பட்ட ஹல்துமுல்ல, பெரகல போன்ற பிரதேசங்கள் காணப்படும் மாகாணம்.

1. தென்மாகாணம்
2. மத்தியமாகாணம்
3. ஊவாமாகாணம்
4. சம்பிரமுவ மாகாணம்

10. குருநாகல் மாவட்டத்திலுள்ள கணேகந்த விகாரை, கல்லென விகாரைகளின் கற்குகைகளில் பிராமி எழுத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களில் காணப்படும் அவரண என்னும் சொல்லின் பொருள்

1. கால்வாய்
2. அலைதாங்கி
3. மதகு
4. அணைக்கட்டு

11. பிராந்திய ஆட்சியாளர்களுடன் போரிட்டு அப்பிரதேசங்களைக் கைப்பற்றி ஆட்சியின் மத்திய நிலையமாக அநுராதபுரத்தைத் தெரிவு செய்த மன்னன்.

1. பண்டுகாபயன்
2. பண்டுவாசுதேவன்
3. தேவநம்பிதீசன்
4. துட்டகைமுனு

12. தேவநம்பியதீசன் முடிசூடுவதற்காக அசோக மன்னனால் அனுப்பிவைக்கப்பட்ட பஞ்ச வஸ்த்துக்களில் உள்ளடக்கப்பட்ட பொருட்கள்

1. ஆலவட்டம், சாமரை, பாதணிகள், மங்களவாத்தியம், நெற்றிப்பட்டம்
2. கொடி, சாமரை, ஆலவட்டம், பாதணிகள், மங்களவாத்தியம்
3. கொடி, குடை, சிம்மாசனம், சாமரை, வாள்
4. குடை, சாமரை, ஆலவட்டம், பாதணிகள், சிம்மாசனம்

13. புராதனகால நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்ட பெயர்.

1. கஸ்பா
2. ஏகஆஸ்தான
3. சபாவ
4. சமிய

14. சேனைப் பயிர்செய்கையில் ஈடுபட்டவர்களிடமிருந்த மன்னர்கள் அறவிட்ட வரி

1. கெடுகனக, தக்கபதி
2. மதரமஞ்சக்க, போஜக்கபதி
3. தக்கபதி, போஜக்கபதி
4. கெதிஅட, கெடுகனக.

15. புராதன காலத்தில் அநுராதபுரத்தில் சமய, கல்வி மத்திய நிலையமாக விளங்கிய விகாரைகளின் தொகுதி

1. மகாவிகாரை, ஜேத்தவனராமய, தூபராம
2. மகாவிகாரை, ஜேத்தவனராமய, அபயகிரி விகாரை
3. மாகாவிகாரை, ரூவன்வெலிசாய, அபயகிரிவிகாரை
4. மகாவிகாரை, ரூவன்வெலிசாய, மிரிசவெட்டி விகாரை

16. புராதன இலங்கையில் மகாவலி கங்கையின் கிளை நதியான அம்பன் கங்கையை மறித்துக் கட்டப்பட்ட பிரமாண்டமான கால்வாய்.
    1. மினிப்பே கால்வாய்
    2. பப்பதன்ன கால்வாய்
    3. எலகரக் கால்ாய்
    4. அங்கமடில்ல கால்வாய்.
17. ஒரு நெல்மணி அளவிலான தங்க நகையில் 21 பூக்கள் செதுக்கபட்டிருந்த தங்க ஆபரணம் கிடைக்கப்பெற்ற அகழ்வு
    1. ஆலாகன பிரிவேனா அகழ்வு
    2. ஜேத்தவனராமய அகழ்வு
    3. அபயகிரி விகாரை அகழ்வு
    4. தெடிகம கொட்ட விகாரை அகழ்வு
18. படுகொலைச்சட்டம் எனப்பட்ட மிருகங்களை எவரும் கொல்லக் கூடாதென முதன்முதல் சட்டமியற்றியவன்.
    1. 4ம் மகிந்தன்
    2. ஆமண்டகாமினி
    3. 4ம் காசியப்பன்
    4. 2ம் கஜபாகு

19. கீழ்வரும் கூற்றுக்களைக் கருதுக.
    - பெலிகலையில் தலதா மாளிகை அமைத்து கொத்மலையிலிருந்த புனித சின்னங்களைக் கொண்டு வந்து பிரதிஷ்டை செய்தான்
    - தேவபதிராஜா என்னும் அமைச்சரின் உதவியுடன் பொருளாதார, சமய கல்வித் துறைகளில் பாரிய வளர்ச்சியை ஏற்படுத்தினான்

    மேற்படி கூற்றுக்களுடன் தொடர்புடைய அரசர்களின் சோடி இவற்றுள் எது?
    1. 3ம் விஜயபாகு , 2ம் பராக்கிரமபாகு
    2. 1ம் விஜயபாகு, 1ம் பராக்கிரமபாகு
    3. 1ம் புவனேகபாகு, 2ம் பராக்கிரமபாகு
    4. 3ம் விஜயபாகு, 4ம் பராக்கிரமபாகு
20. மேல்வரும் வரலாற்று நிழ்வுகளை அவதானித்து, அவை இடம்பெற்ற காலஒழுங்கில் அவற்றை ஒழுங்குபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.

    A – நான்கு கோறளைப் பகுதியின் நிர்வாகி அம்புலுகல குமாரன் 7ம் பராக்கிரமபாகுவைப் பதவி நீக்குதல்

    B – சீனத்தளபதி செங்கோ காலியில் முன்மொழிக் கல்வெட்டைப் பொறிப்பித்தான்.

    C – 1ம் புகனேகபாகு காலிங்கராயர், சோடங்கன் ஆகிய தளபதிகளின் படையெடுப்பை முறையடித்தான்.

    D – முஸ்லீம் தேச சஞ்சாரியான இபன்பதூதா இலங்கைக்கு வருகை தந்து யாழ்ப்பாண இராச்சியத்தினை ஆட்சி செய்த ஆரியச் சக்கரவர்த்திகளைச் சந்தித்தான்.

    1. CDBA
    2. CBDA
    3. BCAD
    4. BADC
21. யாப்பகுவா கோட்டைக்குரிய படிவரிசை மற்றும் தூண்களில் காணப்பட்ட கலைப்பாரம்பரியப் பண்பு.
    1. சோழ. கம்பூச்சிய கலைப்பாரம்பரியம்.
    2. பண்டிய, சோழ கலைப்பாரம்பரியம்
    3. பாண்டிய, கம்பூச்சிய கலைப்பாரம்பரியம்
    4. சோழ, கம்பூச்சிய, பர்மா கலைப்பாரம்பரியம்

22. 1ம் இராஜசிங்கன் கண்டி இராச்சியத்தினை ஆக்கிரமிப்பதற்கு உதவி புரிந்த பிரதானி
    1. யமசிங்க பண்டார
    2. கோனப்பு பண்டார
    3. கரலியத்த பண்டார
    4. வீர சுந்தர பண்டார

கீழ்வரும் அட்டவணையில் A தொடக்கம் J வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 23 ஆம் 24ம் வினாக்களுக்கு விடை தருக.

| கண்டுபிடிப்பாளர்கள் | தாய் நாடு | கண்டுபிடிப்பு |
|---|---|---|
| A – நிக்கலஸ் கொப்பநிக்கஸ் | D - இத்தாலி | G – புவியீர்ப்பு சக்தி |
| B - கலிலியோ கலிலி | E - இங்கிலாந்து | H – புவிகோளவடிவமானது |
| C – ஜசாக் நியூட்டன் | F - போலந்து | J – தொலைநோக்கி |

23. புவியீர்ப்புச் சக்தியைக் கண்டு பிடித்தவருடைய நாட்டினையும் பெயரையும் தரும் விடை
    1. EB
    2. DC
    3. FA
    4. EC
24. நிக்கலஸ் கொப்பனிக்கஸினுடைய நாட்டினையும் அவரது கண்டுபிடிப்பினையும் தருகின்ற விடை எது?
    1. FJ
    2. EH
    3. FH
    4. DG
25. கண்டி இராச்சிய சமூக அமைப்பில் பிராதானிகளின் சேவைக்காக வழங்கப்பட்டநிலம், தேவாலயங்களுக்குத் தானமளிக்கப்பட்ட நிலங்களுக்கு வழங்கப்பட்ட பெயர்கள் முறையே.
    1. விகாரகம், பரவேனிகம்
    2. நிந்தகம், தேவாலகம்
    3. கபடாகம், விகாரகம்
    4. பரவேனிகம், விகாரகம்
26. இலங்கையை வந்தடைந்த முதலாவது போர்த்துக்கேயன்.
    1. வாஸ்கொடகாமா
    2. பிரான்சிஸ்டி அல்மெடா
    3. லோரேன் சோ டி அல்மேடா
    4. பத்தலோமியோஸ் டயஸ்

கீழே A தொடக்கம் E வரையில் தரப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 27ஆம் 28ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.

A – சட்டவாக்க்கழகம், சட்டநிர்வாகக்கழகம்

B – வாக்குரிமை மூலம் பிரதிநிதிகள் தெரிவு

C – அரசுக்கழகம்

D – இராஜகாரிய முறை ஒழிப்பு

E – சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டது.

27. கோல்புறூக், குறுமக்கலம் சீர்திருத்தத்துடன் தொடர்புடைய விடைகளைத் தெரிவு செய்க.
    1. A,C
    2. C,D
    3. E,B
    4. A,B
28. டொனமூர் அரசியல் யாப்பு சீர்திருத்தத்தில் உள்ளடங்கிய விடயங்களைத் தரும் விடை எது?
    1. B,E
    2. C,A
    3. C,E
    4. B,E

29. கண்டி தலதா மாளிகைக்கு பார்த்திருப்பு மண்டபத்தை (பத்திரிப்பு) அமைத்து போகம்பரை வாவியை விஸ்தரித்த மன்னன்.
   1. ஶ்ரீ விக்கிரம ராஜசிங்கன்
   2. கீர்த்தி ஶ்ரீ இராஜசிங்கன்
   3. இராஜாதி இராஜசிங்கன்
   4. ஶ்ரீ விஜய இராஜசிங்கன்
30. இலங்கையில் இறப்பர் பயிர்ச்செய்கை வேகமாகப் பரவலடைந்தமைக்கான காரணம்.
   1. மோட்டார் வாகனக் கைத்தொழில் வளர்ச்சியடைந்தமை செயற்கை இறப்பர் உற்பத்தி செய்யப்பட்டமை.
   2. இலங்கைக்கு பொருத்தமான இறப்பர் இனத்தை அறிந்து அதற்குப் பொருத்தமான தொழினுட்ப முறைகள் பயன்படுத்தப்பட்டமை, தேயிலை விலை தற்காலிகாக வீழ்ச்சியடைந்தமை
   3. ஹெமீலியா வெஸ்டாக்ஸ் என்னும் நோய் கோப்பிப் பயிர்ச்செய்கையைத் தாக்கியமை மோட்டார்வாகனக் கைத்தொழிலின் விருத்தி
   4. தேயிலைப்பயிர்ச்செய்கையின் விலை வீழ்ச்சி, தெங்குப் பொருட்கள் உள்நாட்டில் அதிகளவு நுகரப்பட்டமை.
31. இலங்கையில் உருவாக்கப்பட்ட சில விவசாயக் குடியேற்றங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

   A – பத்மெடில்ல

   B – காகம

   C – நாச்சதுவ

   D – கணதறாவ

   E – மானியன் கடவல

   மேற்குறித்த விவசாய குடியேற்றங்களுள் இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்னர் உருவாக்கப்பட்ட குடியேற்றத்திட்டங்களைக் குறிப்பிடும் விடை எது?
   1. A,B
   2. C,E
   3. A,E
   4. B,D
32. இங்கிலாந்தின் மகாராணியார் இலங்கையரசின் தலைவர் என்ற நிலை அற்றுப்போவதற்குக் காரணமான அரசியல் யாப்பு
   1. 1931 ஆம் ஆண்டு டொனமூர் அரசியல் யாப்பு
   2. 1947 ஆம் ஆண்டு சோல்பரி அரசியல் யாப்பு
   3. 1972 ஆம் ஆண்டு முதலாவது குடியரசு அரசியல் யாப்பு
   4. 1978 ஆம் ஆண்டு இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பு
33. இலங்கையின் முதலாவது அமைச்சரவையில் அங்கம் வகித்த இஸ்லாமியர்.
   1. எம்.சீ.எம்.சித்திலெப்பை
   2. ஜிப்ரிபாபா
   3. டி. பீ. ஜாயா
   4. கே. எம். ராஷாக்.

   மத்திய காலத்தில் திருச்சபையிடம் குவிந்து காணப்பட்ட அதிகாரங்கள் தொடர்பாக மறுமலர்ச்சிக்காலத்தில் விமர்சனங்களை மேற்கொண்ட ஜேர்மனியர்
   1. ஜோன் வைக்கிளிப்
   2. ஜோன் ஹஸ்
   3. மாட்டின் லூதர்
   4. இராஸ்மஸ்

   **பல்வேறு கண்டுபிடிப்புக்களைச்செய்த சிலரின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன.**

   A – ஜோன்ஸ் ஸ்டீவன்சன்

   B – ஜோன் லொகி பொயாட்

   C – டெம்லர்

   D – ஹென்றிபேஸ்மர்

   E – ஆபிரகாம் டர்பி

34. மேலே பெயர் குறிப்பிட்ப்பட்டவர்களுள் கைத்தொழிற்புரட்சியின் போது இரும்புருக்கு, நிலக்கரி போன்ற துறைகளுடன் தொடர்புடைய கண்டுபிடிப்புக்களைச் செய்தோரைத் தரும் விடை
1. D,E
2. C,D
3. B,E
4. C,A

35. முதலாளித்துவ எண்ணக்கரு உலகம் முழுவதும் பரவும் வகையில் அரசின் தலையிடாக் கொள்கையை முன்வைத்தவர்.
1. அரிஸ்டோட்டில்
2. அடம்ஸ்மித்
3. பிளேட்டோ
4. கால்மார்க்ஸ்

கீழே A,B,C,D ஆகியவற்றி தரப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்திற் கொண்டு 36 தொடக்கம் 38 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

| | | |
|---|---|---|
| A – | 1. எனது போராட்டம் | 2. முசோலினி |
| B – | 1. ஜகவர்லால் நேரு | 2. அணிசேரா இயக்கம் |
| C – | 1. சர்வதேச சங்கம் | 2. ஐக்கிய அமெரிக்கா |
| D – | 1. பிரித்தானியா | 2. வின்சன் சேர்ச்சில் |

36. முதலாவதன் தொழிற்பாடு காரணமாக இரண்டாவது உருவாக்கப்படுவதற்கு காரணமான விடைச் சோடியைத் தெரிவு செய்க..
1. A
2. B
3. D
4. C

37. முதலாவதிற்கும் இரண்டாவதிற்கும் எதுவித தொடர்புத் தன்மையையும் தராத விடைச் சோடியைத் தெரிவு செய்க.
1. D
2. C
3. B
4. A

38. முதலாவதன் தோல்விக்கு இரண்டாவது காரணமாக அமைந்த விடையைத் தெரிவு செய்க.
1. C
2. B
3. D
4. A

39. ஐக்கிய நாடுகள் சபையில் வீற்றோ என்னும் இரத்துச் செய்யும் அதிகாரத்தைப் பெற்றுள்ள நாடுகளைப் பின்வரும் விடைத் தொகுதியிலிருந்து தெரிவு செய்க.
1. ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், இத்தாலி, ரஷ்யா
2. ஐக்கிய அமெரிக்கா, போலந்து. பிரான்ஸ், பிரித்தானியா, ரஷ்யா
3. ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, ரஷ்யா பிரான்ஸ், சீனா
4. ஐக்கிய அமெரிக்கா, ஜேர்மனி, ரஷ்யா, பிரித்தானியா, சீனா

40. இரண்டாம் உலக யுத்தத்தில் தோல்வியடைந்த ஐரோப்பிய நாடுகளை மீட்டெடுப்பதற்காக வழங்கப்பட்ட உதவித்திட்டம்..
1. மார்ஷல் திட்டம்
2. சேர்சில் திட்டம்
3. டிற்றோ திட்டம்
4. நாசர் திட்டம்